தத்துவபோதினி.

பு. உ.] சென்னைப்பட்டணம் கஅசுசு௵ ஏப்பிரல்மீ எவ. [இல. கஉ.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம, ஶாந்திஶ்ஶிவமத்வைதம், ததேகஸ்ய தஸ்யோபாஸநயா பாரத்ரிகமைஹிகஞ்ச ஶுபம்பவதி, தஸ்மிந் ப்ரீதிஸ்தஸ்ய ப்ரியகார்யஸாதநஞ்ச ததுபாஸநமேவ.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.
க. கடவுள்துதி	உருக
உ. விளம்பரங்கள்	உருஉ
௩. தத்துவபோதினி	உரு௩
௪. ருக்குவேதசம்ஹிதை	உருரு
ரு. பகவத்கீதை	உருசு
சு. மநுநூல்	உருஅ
எ. பிரும்மதருமம்	,,
அ. அமிருதவசனி	உருகூ
நிருபங்கள்.	
கூ. கோயிலாஸ்தி வினுவிடை	உசு0
க0. சதுர்வேதங்களைக் குறித்து	உசு௩
கக. உடுமலைப்பேட்டைபஜனைகூடம்	,,
கஉ. பட்டுக்கோட்டை பஜனைகூடம்	உசு௪
க௩. சேலம்வேதசமாஜவிண்ணப்பம்	உசுஎ
க௪. புனர்விவாக விளம்பரம்	கசுஅ

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள் துதி.

இராகம் - காம்போதி - ரூபகதாளம்.

பல்லவி.

நிழலளித்ததுமுண்மையே, எந்தன்
ஆவியிற்காவியாம் பிரமா,

அனுபல்லவி.

விழலநாமிந்த பாவிசெய்யும்பல
பிழைகளைநீபொறுத்தருள்வாயென்னு............(நிழல.)

சரணங்கள்.

க. அன்னைவீட்டெனவெ-யுன்னிவருகின்ற,
மன்னுயிர்யாவையும்-என்னுயிரெண்ணி,

அன்னமளித்தென்றன்-சென்னியில்தாங்கவே,
என்னாளுங்குன்றாத-நன்னிலைநான்பெறில்............(நிழல.)

உ. முண்டுநான்புரிந்த-துன்பத்தொடரென்றன்,
என்வினைப்பற்றாமல்-அன்போடுநீதந்த,
இன்பங்களுக்காக-என்புத்திதாழாமல்,
நின்பாதம்வணங்கிப்-பின்பு கெதிபேறில்............(நிழல.)

ங. அண்டாண்டம்யாவையும்-உண்டாக்கிக்காக்கின்ற,
பண்டாம்பிரமத்-திரண்டாவதில்லென,
பெண்டுபிள்ளைகளும்-அண்டினபேர்களும்,
ரெண்டுப்படாமலே-கொண்டாடுவோமெனில்......(நிழல.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்......................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..... ....க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணா வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ச - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதன

த்தைக்குறித்தது நன்றுய் ப

யிண்டுசெய்தது,............0 - அ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது.......0 - எ - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - க - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்கு ஒருஅணுவீதம் தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, உ௰ வுக்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளைப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினல் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினலே நிருபமெழுதமனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியன்றவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

தத்துவபோதினி.

கடந்த இரண்டு மூன்றுபத்திரிகைகளில் விஷயாந்தரங்களைக்குறித்துப் பிரஸ்தாபிக்கும்படி நேரிட்டபடியால் இன்று, எட்டாவதிலக்கப்பத்திரிகையைத் தொடர்ந்து விஷயவிசாரம்செய்வோம்.

ஆவசியகமான சங்கேதங்களைக்குறித்து ஒருவாறு விசாரித்து முடித்தபடியால், இன்று கேவலம் அநாவசியகமானவற்றைக்குறித்துப்பிரஸ்தாபிப்போம். லோகோபின்னருசியென்கிற பழமொழியின் கருத்தே யிவ்வித சங்கேதங்களுக்குக் காரணமாம். ஒரேவயிற்றிற்பிறந்து ஒரேகுடியில்வாழ்ந்திருக்கும் பலரில் ஒருவற்கு உவர்ப்பிலும் ஒருவற்குகார்ப்பிலும் ஒருவற்குப் புளிப்பிலும் விசேஷப்பிரீதியிருப்பது அனுபவசித்தமாக விருக்கின்றது.

இவ்வாறு இருக்கையில் உவர்ப்பில் விருப்பமில்லாதவன் உவர்ப்படையே பரிக்கிரகிக்கவேண்டுமென்றும் புளியில் விருப்பமுள்ளவன் அதைத் தியஜிக்கவேண்டுமென்றும் நிர்பந்தித்தல் உசிதமோ, ஆவசியகமோ, தர்மமோ. இத்தன்மையான அப்பிரயோஜக விஷயங்களிலெல்லாம் நிர்பந்தங்கள் ஏற்பட்டிருப்பது சாத்தியமோவென்று சங்கிக்கவேண்டாம். முதலில் அன்னத்தைப்பரிமாறிய பிறகே வியஞ்சனதிகள் பரிமாறவேண்டுமென்று சிலரும், வியஞ்சனங்களைப் பரிமாறியபிறகே அன்னமெடுக்க வேண்டுமென்று சில

ருமாக நம்மில் இருகக்ஷிபட்டு தலையையு
டைத்துக்கொள்வது உலகப்பிரசித்தமா
கவிருக்கிறது. மீசை வைத்துக்கொள்வ
தினல் சுவரூபஹானியென்று சிலரும்,
அதைமழுக்குவது பாதகமென்றுசிலரும்
இவ்விதம்மாகபோராடுவதும்அருமையல்ல

தர்மசாஸ்திரர்திக் கிரந்தங்களில் இ
வற்றைக் கிரஹிக்கவுமில்லைத் தியஜிக்கவு
மில்லை. அன்றியும் தர்மசாஸ்திரம் ஆ
சாரகாண்டத்தைப் பரிசோதிக்குமளவில்
கல்விற்குக்கல்லாலேயே சுத்தியென்றும்,
தாம்பிராதிகளுக்குப் புளியில் சுத்தியெ
ன்றும்வியவஸ்தைகள் ஏர்ப்படுத்தியதில்
நம்முடைய்தின்பண்டங்களில்பெரும்பா
ன்மைக்கும் கிரயசுத்தியே விதித்திருக்கி
றது. இவ்வளவே சாஸ்திரரீதிக்குப் போ
துமானதாகவிருக்கையில் நம்மவர் அனே
கபண்டங்களுக்குக் கிரயமே சுத்தியென்
றும், அனேகத்தைக் கிறயத்துக்குக் கொ
ள்வதுதவிர கழுவவேண்டியது மாவசிய
கமென்றும், அனேகத்தை அப்படிகழிவி
யும் கிரகிக்கக்கூடாதென்றும் கொண்டிரு
ககின்றன. சாஸ்திரத்தில் ஏர்ப்பட்டிரு
க்கும் சங்கேதங்கள் எவ்வளவு நிற்ஹேற
துகங்களாக விருக்கின்றதோ அவ்வளவு
நிர்ஹேறதுகங்களாகநவீனபுரட்டுக்களால்
விளையும் சாதகபாதகங்களைச் சற்றுப் பரி
சோதிப்பது அப்பிரயோஜகமாக விராது.
பொன்னில் களும்பு ஏறமாட்டாதாகை
யாலும் அந்த விலையுயர்ந்தபண்டத்தை
ச்சாம்பல்முதலியவற்ருல் கேய்ப்பதினல்
விசேஷநஷ்டம் நேரிடுமாகையாலும், அ
து சுவ்தஸ்ஸித்தமாய் சுத்தியுள்ளதென்
றும், வெள்ளியோவெனில், அது விலையு
யர்ந்ததாகிலும், களும்புறத்தக்கதாகையா
ல், அந்தக்களும்பைப்போக்க உதவும் சு
ணும்பாலதற்குச் சுத்தியென்றும், தா
ம்பராதிகள் புளிசம்மந்தமன்றி சுலபமா
ய் வெளுக்கமாட்டாதாகையால் அவற்றி
ற்குப் புளியினல்சுத்தியென்றும், வெண்
கலம் புளியினல் வெளுக்கமாட்டாதாகை
யால், சாம்பலினல்தற்குச் சுத்தியென்று
ம் விலையிலும் நயற்று, மிகுந்த அழுக்கி
னின்றும் மீளமாட்டாத பானைசட்டிகட்
கு ஒன்றாலும் சுத்தியிலலையென்றும், து
ணிக்கு வண்ணான்கையாலே சுத்தியென்
றும், கடையிற்கொள்ளும் தின்பண்டங்க
ளுக்கு அவற்றிற்காககொடுக்கும் கிறய
மே சுத்தியென்றும், கழுவிமுடியாதபண்
டங்களுக்கு சூரியரசும்மியில் சுத்தியென்
றும் தர்மசாஸ்திரததில் ஏர்ப்பட்டிருக்கு
ம்விதிகளுக்குரிய ஹேறதுக்களை ஸவிஸ்
தாரமாய் விசாரிக்க இப்போதிடமுமில்லை
காலமுமில்லை யாகையாலும், அவைபுத்தி
மான்களுக்குத்தாமாய் விளங்குமாகையர்
லும், அவற்றைக்குறித்து இவ்வளவுகுறி
ப்பிட்டதே போதுமென்று நம்புகிறோம்.
பிறகிருதத்தில் நம்மவர் கறிகாய்முதலிய
வற்றைக்கொள்ளுங்கால் அவை அவற்றி
ன் கிறயத்தாலேயேசுத்தியாகிவிட்டபோ
திலும் மறுபடிகழுவாதவரையில் அவற்
றைக் கிரகிக்கக்கூடாதென்று நிஷேதிக்கி
ன்றனர். இவ்வாறு செய்பவர், மோர்,
பால், நெய், வெல்லம், உப்பு, பாக்குமுத
லியவற்றிற்கும் கிரயசுத்தியேபோதாது;
அலம்பியேமுடியவேண்டுமென்பார்களா
கில் இவர்களாசாரத்தை அசந்தர்பமாய்
கொள்ளமாட்டோம். கழுவினல் முத
லன்றி ஒழிந்துபோகுமாகையால் இவற்
றைமாத்திரம், அவற்றிலுள்ள் எச்சலகு
ப்பை முதலியவற்றுள் கிறயமாய்கிடை
த்தாலும், தானமாய்கொடுத்தாலும், கி
டைத்தவரையில் அவற்றையுண்பதும், க
றிகாய்முதலியவை அலம்பியானபிறகும்,
துலுக்கர் பறயர்முதலியவர்களால் பயிரி
டப்பட்டால்அக்கிராஹியமென்றுஒதுக்
கொள்வதும் எவ்வளவுயுக்திக்குப்பொரு
ந்துமோ நாங்களறியக்கூடவில்லை. ஆன
ல் இவ்விஷயங்களில் ஆத்மதுஷ்டியே மு
க்கியமென்று மனு விதித்திருக்கிறபடியா
லும், இவ்வாறுசெய்தாலொழிய தங்களு
க்குத் திருத்திபிறக்கிற தில்லையென்றும்,
நம்மவர் வாதிப்பார்களெனில் சாஸ்திரத்
துக்கு இசைந்தபடி நடப்பது அவர்கட்
கு திருத்தியுண்டாகாவிடிலும், அயலார்
இவ்வாறு நடப்பதைக்கண்டுகோபிப்பது
ம் தூஷிப்பதும், எவ்வளவுவிவேகமோ
தெரியாது. வண்ணான் துவைத்தாலன்
றி வஸ்திரத்திற்கு சுத்தியில்லையென்றும்
பிராம்மணன் துணியைத்துவைத்தால் பீ

ராம்மண்ணியம் போய்விடுமென்றும், சாஸ்திரமேற்பட்டிருக்கையில், பிறகிருதத்தில் பிராம்மணனெல்லாம் வண்ணுநாகியும்சிலப்பேன் பற்றியதுணிகளை தரிப்பதுமன்றிசலவை வஸ்திரங்கள்தரிப்போரைத்தீண்டவுங் கூடாதென்று ஒதுக்குவதுலோகப்பிரசித்தம். இவ்வாறு நம்மவர் ஆசாரங்களிலுள்ள குறும்புகள் ஒவ்வொன்றையுங்குறித்து விஸ்தாரமாய் பிரகிருதத்தில் கூறிமுடியாதாகையால் இத்தன்மையான விஷயங்களில்மனுஉறைத்தவாறு அவரவர் இஷ்டப்படி நடத்துவதேஉசிதமென்று எச்சரித்து இந்தபாகத்தை முடிக்கிறோம்.

ருக்குவேதசம்ஹிதை.

சூக்தம், கூ. (௰எ)

[ருஷியும்பாவும் முன்போல தேவதை இந்திரனும் வருணனும்.]

வர்க்கம்-௩௨.

க. ஐஂத்ராவாருணயோரஹம், ஸம்ராஜோரவ ஆவ்ருணே, தா நோ ம்ருளாத ஈத்ருஶே, ஸம்ராஜோ:

பேராசர்களரகியு * இந்திரா வருணர்களுடைய ரக்ஷணத்தை நான் எல்லாவிடத்தினின்றும் பிராத்திக்கிறேன். அவர்கள் இவ்விதத்தில் எங்களைச் சுகப்படுத்துவார்களாக.

உ. கந்தாரா ஹி ஷ்டோ அவஸே, ஹவம் விப்ரஸ்ய மாவத:, த்தாரா சர்ஷணீநாம்.

மக்களைத்தாங்குகிற வர்களாகிய நீங்களிருவரும் காப்பாற்றலின் பொருட்டுஎன்னைப்போன்ற விப்ர † னுடைய கூப்பிடுதலை அடையப்போகிறவர்களாகி விடுகிறீர்கள்.

௩. அநுகாமம் தர்பயேதாம், இந்த்ராவருணா ராய ஆ, தா வாம் நேதிஷ்டமீமஹே.

இந்திரா வருணர்களே, நம்முடைய விருப்பத்தின்படி திரவியத்தின் (கொடையால்)எங்கிருந்தும் நம்மைத் திருப்தியாக்குங்கள். அப்பேர்ப்பட்ட உங்களை மிகுந்த சாமீப்பியம்யாசிக்கிறேன்.*

௪. யுவாகு ஹி ஶசீநாம், யுவாகு ஸுமதீநாம், பூயாம வாஜதாவ்நாம்.

(நம்முடைய) கருமங்களுக்குரிய(ஸோமமானது) கலந்திருக்கிறது † நற்புத்தியினருடைய (ஸ்தோத்திரமும்) கலந்திருக்கிறது ‡ (அவ்வாறே நாங்களும்) அன்னங்கொடுப்பவர்களுள் (கலந்தவரால்) ஆகக்கடவோம்.

௫. இந்த்ர: ஸஹஸ்ரதாவ்நாம், வருண: ஶம்ஸ்யாநாம், க்ரதுர்பவத்யுக்த்ய:

இந்திரனைவர், ஆயிரத் தோகையாய்க்கொடுப் போர்களுள் (தன் தானத்தை) செய்பவராகிறார் (அப்படியே) வருணனைவர் புகழத்தக்கவர்களுள் புகழத்தக்கவராகினர்.

வர்க்கம். ௩௩.

௬. தயோரிதவஸா வயம், ஸநேம நி ச தீமஹி, ஸ்யாதுத ப்ரரேசநம்.

அவர்களுடைய ரக்ஷணத்தினலே, நாங்கள் (பொருள்) அடைவோமாக; நிதியாகவைப்போமாக; அன்றியும்இன்னும் அதிகமாய் (நமக்கு) இருக்கக்கடவது.

---

* ஸம்ராஜோ: 'மிகுந்த பிரகாசமுடையவர்கள்' என்றும் பொருளாம்.

† அறிவோன், இவ்விடத்து; ருத்துவிக்கு.

* எப்போதும், எங்கள் சமீப மிருக்கும்படி.

† "வஸ்திரீவரீ, எகதறைஎன்னும் ஜலபேதங்களும் பாலினூறின சில பதார்த்தங்களும் கலந்திருக்கிறது" எனவுரை.

‡ ருத்துவிக்குகள் செய்யும்ஸ்தோத்திரங்கள் அந்தந்ததேவதைகளுக்குரிய குணங்கள் கலந்திருக்கின்றன, என்றுரை.

எ. இஜ்ராவாருணவாஹம், ஹு வெவிதாயயாராயஸெ, சுஷூநுதஸ்ஜி ஹ்ஷஷ்க்ஷாதம்.

இந்திராவருணர்களே, உங்களை நான் இவ்விதமான பொருளின் பொருட்டுக்கூப்பிடுகிறேன். எங்களை மிகவும் ஜயசாலிகளாக்கி விடுவீர்களாக.

அ. இஜ்ராவாருண நூநுவாம், ஸிஷாஸந்தீஷுயீஷ்வ, சுஷூஹ்ம்ஶஹய ஶூதம்.

இந்திராவருணர்களே, (நம்முடைய)புத்திகள் உம்மைநன்றாய் ஸேவிக்கவிருப்பமுள்ளவைகளாயிருக்குந்தோறும், எங்களுக்கு அதிசீக்கிரத்தில் சுகமளிப்பீர்களாக.

கூ. ப்ரவாமெஶ்ராதஸுஷ்ஷு திரிஜ்ராவாருணயாம்ஹுவெ, யாஷ்ருயாதெஷவஸ்துதி.

இந்திராவருணர்களே எந்த (நல்லஸ்துதிகளினுடத்து) நாம்உங்களைஅழைக்கிறேமோ, (மேலும் உங்களிருவருக்கும்) பொதுவான எந்தஸ்துதியை (அடைந்து நீங்கள்) விர்த்தியடைகிறீர்களோ அந்த நல்லஸ்துதிகள் உங்களை அடையக்கடவது.

பகவத்கீதை.

கஎ-வது-அத்தியாயம்.

அர்ஜுனன்சொல்.

க. ஓகிருஷ்ண! யாராவல் சாஸ்திராசாரத்தைவிட்டு சிரத்தையால் ஆஸ்திக்கிய புத்தியுடன், (என்றல் கடவுள் ஒருவர் உளரென்னும் ஸ்திரசித்தத்தோடு) கூடினவராக) பூஜிக்கின்றனரோ அவர்களுடைய நிஷ்டைஎப்படிப்பட்டது. ஸாத்வீகமா, ராஜஸமா, அல்லது தாமஸமா.

கிருஷ்ணன்சொல்.

உ. தேஹதாரிகளுக்கு ஸம்ஸ்கார்ரத்தினுல் உண்டாகும் சிரத்தையானது ஸாத்விகவிஷயமென்றும்; ராஜஸவிஷயமென்றும், தாமஸமென்றும் மூன்றுவிதங்கள் ஆகின்றது. அந்தசிரத்தையைக்கேள்.

ங. ஓய்பாரதா! சமஸ்தபிராணிகளுக்கும், ஸத்ஸ்வரூபமாகிய சிரத்தையானது ஸ்வபாவமாயுண்டாகிறது. ஆகையால் எந்தபுருஷன் ஆஸ்திக்கிய புத்தியுடையவனோ (என்றல் கடவுள் ஒருவரேயென்று நம்புகின்றனோ)அவன் அத்தவிசுவாசத்தையே மேன்மையாக வுடையவன்.

ச. சத்வகுணமுடையவன் தேவர்களைப் பூஜிக்கின்றன். ரஜோகுண நிஷ்டர்கள் யக்ஷராக்ஷசுகளைப் பூஜிக்கின்றர். தாமஸகுண பரானாகிய ஏனையோர், பிரேதங்களையும் (சிராத்திகளால்) மாத்திருகாதி கணங்களையும் பூஜிக்கின்றனர்.

ரு. டம்பாஹங்காரங்களொடு கூடிய அனுராக பலங்களையுடைய எந்தஜனங்கள் அசாஸ்திரீயமான கோரதபங்களைச் செய்கின்றனரோ.

சா. எந்த அவிவேகிகள் சரீரத்திலிருக்கும், இந்திரியசமூஹத்தையும், அச்சரீரத்தில் (அந்தரியாமியாயுள்ள) என்னையும் நசிக்கச் செய்கிறர்களோ அவர்களை ராக்ஷசசம்பந்தமான நிச்சயமுடையவர்களாக அறிவாய்.

எ. சமஸ்தபிராணிகளுக்கும் மூன்றுவிதமான ஆஹாரம் பிரியமாகின்றது. அவ்வாறே யக்கியமும், தபசும், தனமும் பிரியமான து)அவைகளுக் குண்டான இந்தப்பேதத்தைக்கேள்.

அ. இரசயுக்தமானதும், எண்ணையோடு கூடினவையும், ஸ்திரமானவும, மனோஹரமானவும், ஆயுள் சத்வபலாரோக்கிய சுகப்பிரீதி விருத்திகரமானவும் ஆஹாரங்கள் சாத்விக குணமுடையவர்சளுக் கிஷ்டமாகின்றன.

க. துக்கசோக ரோகப்பிர்தங்களாகிய, அதிகசப்பு, அதிபுளிப்பு, அதியுயர்ப்பு, அத்தியுஷ்ணம், அதிதீக்ஷணியமுமான, குரோதத்தை யுண்டாக்கும் கடுகைப்போன்றஆஹாரங்கள் ரஜோகுணமுடையவர்களுக்குப் பிரயமாகும்.

கO. எந்த ஆஹாரம் காலதாமஸத்தால் குளிர்ந்து ரசவர்ஜிதமாய் துர்கந்தமுடையதும், பருயிஷிதமானதும் ஆகிய ஆஹாரங்களதாமஸகுணமுடையவனுக்குப்பிரியங்கள்.

கக. சாஸ்திரோக்தவிதியினுல் பார்க்கப்படுகிற எந்தயக்கியமானது பலத்தில் அசையற்றவர்களால் செய்யத்தக்கதென்னும் நிச்சயமனதுடன் செய்யப்படுகின்றதோ அந்தயக்கியமானது சாத்வீகமென்று சோல்லப்படும்.

கஉ. ஓய்பரதசிரேஷ்டனே!எதுவானுல் பலத்தை யுத்தேசித்து டம்பத்தின்பொருட்டு செய்யப்படுகின்றதோ அந்தயக்கியமானது ரஜோகுணத்தின் தென்றறிவாய்.

கங. சாஸ்திரஹீனமானதும், அன்னதானரஹிதமானதும், மந்திரரஹிதமானதும்,தக்ஷிணையற்றதும், விசுவாஸமற்றதும் ஆனயக்கியமானது தமோகுண பிரதானமானதென்று சொல்லப்படும்.

கச. தேவதிவஜ இருப்பிராக் கியர்களை பூசிபபதும், சுசித்வமும், நேர்மையும், பிரம்மசரியம், இவைகள் சரீரப் பிரதானமான தபசென்று சொல்லப்படும்.

கரு. துக்ககரமாகாத, சத்தியமான, பிரயமானவும், ஹிதமானவும் வார்த்தையும் வேதப்பியாசமும், இவைகள் வாக்ரூபமான தபசென்று சொல்லப்படும்.

கசு. மனதுக்குச்சமாதானமான நல்லவிருத்தியும், மௌனமும், மனோநிக்கிரகமும், மனச்சுத்தியும், இத்தியாதிகள் மானசிகமான தபசென்று சொல்லப்படும்.

கஎ. பலாபேக்ஷையற்றவும்,யோகிகளானவும், நார்களால் உத்கிருஷ்டமான சிரத்தையோடும் தபிக்கப்படுகிற, மூன்றுவிதமான இந்தத்தபசை சாத்விகமானதாக சொல்லுகின்னினர்.

கஅ. சத்கரிக்கும்பொருட்டும், பஹுமானத்தின்பொருட்டும், எந்ததபசு செய்யப்படுகின்றதோ,சஞ்சலமுள்ளவும், நாசமுள்ளவும், அந்ததபசானதுராஜசகுண சம்பந்தமுள்ளதாக சொல்லப்படுகின்றது.

க௯. அவிவேக நிச்சயத்தால் அஹங்காரபீடிதமாகி பிறருடைய விஞசத்தின் பொருட்டுச் செய்யப்படும் தபசு தாமமென்று சொல்லப்படும்.

உO. எந்ததானமானது கொடுக் கத்தக்கதாகி, காலதேசவர்த்தமானங்களுக் கிசைய தகுதியுள்ளவர்களுக்குப் பிரத்தியுபகாரமின்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அது சாத்விகமென்று சொல்லப்படும்.

உக. எதுபலத்தை யுத்தேசித்தும், பிரத்தியுபகாரத்தின் பொருட்டு க்லேசமுண்டாகும்படி கொடுக்கப் படுகின்றதோ அது ராஜசமென்று சொல்லப்படும்.

உஉ. எந்ததானம் காலதேசவர்த்தமானங்களுக்கேலாமல் அபாத்திரர்களின் பொருட்டு சத்காரரஹிதமான அவமானயுக்தமானவும் அந்ததானம் தாமசமென்று சொல்லப்படும்.

உங. ஓம்தத்சத்-என்று மூன்றுவிதங்களாக பரமாத்மாவின் நாமோச்சரணம்சொல்லப்பட்டது. அதனுல் பிராம்மணர்களும் வேதங்களும், யக்கியங்களும், பூர்வகாலத்தில் நிர்மிக்கப்பட்டன.

உச. அந்தக்காரணத்தினுல் சாஸ்திரோக்தரான பிரம்மவாதிகள் யிக்கியதான தபசாதி கிரியைகளைஓம் என்று உச்சரித்து ஆரம்பிக்கின்றனர்.

உரு. முமுக்ஷுக்களால்தத்என்னும்,பிரம்மாபிதானம்(உச்சரித்து) பலத்தைக் கோராமல் யக்கியதபச் கிரியைகளும், நானுவித தானக்கிரியைகளும் செய்யப் படுகின்றன.

உசு. ஓய் பாகதத்தனே! உண்டென்னும் பொருளிலும் ஸ்ரேஷ்டமென்னும் பொருளிலும் சத்என்னும் பதம் பிரயோகிக்கப்படுகின்றது. அவ்வாறே, பிரசஸ்தமான கர்மத்தின்பொருட்டும், ஸத்சப்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

உஎ. யக்கியத்திலும், தபசிலும், தானத்திலும்ஸ்திரமானது ஸத்என்று சொல்லப்படும். அந்தபகவதர்த்தியமானகர்மமும், ஸத்என்று சொல்லப்படும்.

உஅ. ஓய்பார்த்தனே!அவிசுவாஸ்திதினுல் எந்தஹோமம் செய்யப்படுகின்றதோ, எதுகொடுக்கப்படுகின்றதோ, எதுதபிக்கப் படுகின்றதோ, அவையெல்லாம் அஸத்தென்றுசொல்லப்படுகின்றது. ஆகையால் இஹத்திலும் பரத்திலும் பலத்தைக் கொடுக்கமாட்டாது.

மநுநூல்

தொடர்ச்சி

கருO. ஞானசம்பந்தமான பிறப்பை யுண்டாக்கி விதாயகமானதர்மத்தையுணர்த்தும் விப்பிரன்தான் சிறியவனயிருந்தாலும் நியாயமாக விருத்தனுக்கும்பிதாவென்றழைக்கப்படுவான்.

கருக. அங்கிரசபுத்திரனகிய வித்வான்கவி(என்பவன்)தன்தகப்பனேடு பிறந்தோருக்கும், அவர்களுடைய புத்திரர்களுக்கும் வேதங்களைக் கற்பித்தனன்; திவ்வியஞானத்தால் சிறந்தவராதலனின்இவர்களை நோக்கி "சிறியபிள்ளைகளே" என்றனர்.

கருஉ. அவர்கள் கோபமடைந்துமேற்கண்ட வாக்கியத்தின் பொருளென்னவென தேவர்களை வினவினர்கள்; தேவர்கள் ஒன்றுகக்கூடி, "அப்பிள்ளை யுங்களைச் சரியாகவே அபிவாதனஞ் செய்தது" என்று விடைகொடுத்தார்கள்.

கருங. ஏனெனில் கல்லாதவன்உண்மையாகவே பாலனகிறுன்; இவனுக்கு யாவன் வேதங்கற்பிக்கிறுனே அவன் பிதாவாகின்றுன். அறியாதவனைக் குழந்தையென்றும், வேதங்கற்பிப்போனை பிதாவென்றும் பெரியோர்கள் எப்பொழுதுஞ் செப்பியிருக்கின்றனர்.

கருச. பெருமையானது வயதினலாவது, நரையினலாவது, தனத்தினலாவது, பலமுள்ள பந்துககளாலாவது உண்டாகமாட்டாது. "யாரானல வேதங்களையும் வேதார்த்தங்களையும் வாசித்திருக்கின்றுனே அவனே நமமில்பெரியவன்" என்கிற இவ்விதியை வேதரிஷிகள் நிலையாக ஸ்தாபித்திருக்கின்றனர்.

கருரு. மேன்மையானது விப்பரருக்குள் தேவவித்தையாலும், க்ஷத்திரியருக்குள் பராக்கிரமத்தினலும், வைசியருக்குள் தான்னியமிகுதியாலும், சூத்திரருக்குள் மூந்தியபிறப்பாலும் உண்டாகும்.

கருசா. ஒருவன்தலை நிரைத்துப்போவதினலேயேவிருத்தனகமாட்டான். யாரானல் வேதங்களை வாசித்துஅறிகிறுர்களோ அவர்கள் வயதிற்சிறியோராயினும் மூத்தோராகவே தேவர்களால் நிச்சயமாக மதிக்கப்படுகின்றனர்.

கருஎ. கல்லாதபிராமணன் மரத்தால் செய்த யானையையும், தோலால்செய்த மானையும் போலாவான். இம்மூன்றுக்கும் பேரேயன்றி வேறென்று மில்லை.

கருஅ. நபுச்சகன் பெண்கள் சம்பந்தத்தால் பலன்கொடாததுபோலவும், பசுபசுவோடு சம்பந்தித்தால் நிஷ்பிரயோசனமாவது போலவும், அறிவீனனுக்கு தாயாளம்பயன் படாததுபோலவும், வேதங்களை வாசியாத விப்பிரனும் நிஷ்பிரயோசனமானவனே.

கருகூ. நல்லஉபதேசமானது உபதேசிக்கப்படுவோனுக்கு வருத்தமின்றி செய்யப்படவேண்டும். தருமத்தைக்காக்கும் குருவானவன் மதுரமான சாந்தவாக்கைப்பிரயோகிக்க வேண்டும்.

ஓம்தத்ஸத்

பிரமணேநமஃ

பிரமதருமம்.

க-வது-அத்தியாயம்.

க. ஓம்பிரம்மவாதிகள் சொல்லுகின்றுர்;—எதனின்று மிந்தபூதங்கள் உண்டாகின்றவோ எதினலுண்டானவை உயிர்வாழ்கின்றவோ, உயிர்வாழ்பவை(அந்தியத்தில்) எதைஅடைகின்றவோ, அதைநன்றுயறி, அது(வே)பிரம்மம்.

உ. ஆநந்தத்தினின்று மல்லவோ இந்தபூதங்கள் உண்டாகின்றன; ஆநந்தத்தினல் (அல்லவோ)உண்டானவை உயிர்வாழ்கின்றன; ஆநந்தத்தை(யல்லவோ) வாழும்பூதங்கள் அடைகின்றன.

ங. (விக்கியான மயமான்)மனதுடன் கூடினவருக்கு (ஆநந்தமயமான)எது பிரகாசியாமையால், எதினிடத்தினின்று திரும்புகின்றதோ, அப்படிப்பட்ட(மனேமயமான) பரப்பிரம்மத்தின் (உபாஸனபல

த்திற்கு அதிதைவதமான) ஆநந்தத்தைய
றிந்தவன், எவ்விடத்தும் (துக்கமாகிற) எ
வ்வித பயத்தினின்றும் விடப்பட்டவனு
வான்.

௪. அப்பரமாத்மா(திருப்திக்கு ஹேற
துவானவும், ஆநந்தமளிக்கததக்கவுமான)
ரஸம். இச்சீவன் (இந்த) ரஸத்தையல்ல
வோ யடைந்து சுகமுடையதாகின்றது.

௫. ஆநந்தரூபமான இப்பரமாத்மா
ஆகாயத்தில் இராமலிருப்பாரேயாகில், உ
லகத்தில் சரீரசேஷ்டை எவன்தான் செ
யவான்; எவன்தான் ஜீவிப்பான். இந்
தபரமாத்மாவல்லவோ (லோகத்தில் தர்
மானுரூபமாய்) சுகப்படுத்துகிறது.

௬. எப்பொழுது நிர்விஷயனுயும், அ
சரீரனுயும், அநிருக்தனுயும், ஆதாரமற்று
மிருக்கிற இப்பரபிரம்மத்தினிடத்தில் ஸ்
திதியை (சரண்) பயமில்லாமல் அடைகி
ன்ருனே, அப்பொழுது அவன் அபயம்
பெற்றவனுவான்.

௭. (விக்கியானமயமான) மனதுடன்
கூடியவருக்கு (ஆநந்தமயமான) எது பிர
காசியாமையால் எதினிடத்தினின்று திரு
ம்புகின்றதோ, அப்படிப்பட்ட (மனோம
யமான) பரப்பிரம்மத்தின், (உபாஸனபல
த்திற்கு அதி தைவதையான) ஆநந்தத்தை
யறிந்தவன், ஒருபொழுதும் பயப்படுகி
றதில்லை.

௮. இச்சீவனுக்கு (ஆநந்தரூபமான இ
ப்பரமாத்மா வல்லவோ) பரமகதி. சகல
மான விபூதிகளின் மத்தியில் (இப்பரமாத்
மாவல்லவோ) இதற்கு (சீவனுக்குப்) பர
மசம்பத்து. இதற்கு (இப்பரமாத்மாவல்
லவோ) பரமலோகம், (விஷயேந்திரிய ச
ம்பந்தத்தினுலுண்டாகும், ஆநந்தசமூஹ
த்தைவிட) இப்பரமாத்மாவே பரமாநந்த
ம்; இப்பூரணானந்தத்தின் கலாமாத்திரத்
தாலல்லவோ இதரபூதங்கள் சீவிக்கின்
றன.

முதற்கண்டத்தின் முதலத்தியாயம்
முற்றிற்று.

அமிர்தவசனி.

இல்லறம்.

என்பிரியமுள்ள சகோதரியே!

" நீ இந்தப் பட்டணத்தை விட்டுப்
" போகுமுன்னமே நான்கண்டு சந்தித்
" து, உனக்குச் சிலநல்ல ஆலோசனைக
" ளைச் சொல்லலாமென்று மெத்தவும்ஆ
" வலாயிருந்தேன். ஆனல் அதற்குச்சா
" வகாசப்படாமற் போனதற்காக மிகுந்
" ததுக்கப்பட்டு, இந்தக்கடிதத்தின் மூல
" மாயாவதுஎனக்குத் தெரிந்தமட்டுஞ்
" சிலயோசனைகளை எழுதுகிறேன். நீ அ
" வைகளைப்பெரியமன்து பண்ணிக் கவ
" னத்தோடே வாசித்து மனதில் வைத்
" து, அதின்படி செய்யவும் நடக்கவும்
" பிரயாசப்படுவாயாக.

" கடவுளின் கிருபாகடாட்சத்தினுலே
" நீயும் என்னுடைய அருமைக் கணவ
" னும் சீரங்கபட்டணம் சுகத்துடனே
" போய்ச் சேர்ந்தீர்களென்று கேள்விப்
" பட்டு மிகுதியுஞ் சந்தோஷப் பட்டே
" ன். என்பிரிய சகோதரியே! நீ இப்
" போது ஒருபுதிய நிலைமையில் வந்திரு
" க்கிருய். சிலமாதங்களுக்குமுன் நீ இ
" ருந்த ஸ்திதிக்கும் இப்போதிருக்கிற
" ஸ்திதிக்கும் மெத்த வித்தியாசத்தைக்
" காண்பாய். நீஇதை ஏனோதானோவெ
" ன்று அற்பமாய் எண்ணக்கூடாது. ந
" ம்முடைய தேசஸ்தர் இந்த விவாககா
" ரியத்தை ஒரு விளையாட்டுக் காரியம்
" போல் எண்ணி, பிள்ளைகள்பொம்மை
" களை அலங்காரமாய்ச் சிங்காரித்து, அ
" வைகளுக்குக் கலியாணமென்று சொ
" ல்லும்வேடிக்கைசெய்வதுபோல் இவர்
" களுஞ் செய்கிருர்கள். ஒருபெரிய ஆ
" ஸ்திவந்தன் தன்திரவியத்தை எப்படி-
" ச்செலவுசெய்கிறதென்று தெரியாமல்
" தன்அருமைக் குமாரனுக்கு மங்களகா
" ரியத்தை உலகத்தில் யாவரும் பார்த்
" துப்புகழும்படி மெத்த அலங்காரமாய்
" ப்பந்தல்போட்டு, மணவறை சிங்காரி
" த்து, அனேகவிதமான வாத்தியங்களை
" ச்சேவித்து, வெகுடம்பமாய்ச் செய்கி

“ றுன். இரண்டு மூன்றுமாதம் சென்று
“ நீ அந்த வீட்டுக்குப் போய்ப்பார்த்தா
“ ல் அந்தச்சிறுபெண்ணின் முகம் களை
“ பொருந்திராமல் வாடியிருக்கும்; என்
“ னமுகாந்தரமென்றுகேட்டால், அவள்
“ சொல்லுவாள்: என்கணவன் என்னை
“ நேசிக்கிறதே இல்லை. என்னைப் பார்த்
“ தால் அவருக்கு வெறுப் பாயிருக்கிற
“ து.. அவ்வளவுதான் நான் இந்தப்பூ
“ லோகத்தில் கொடுத்துவைத்தது என்
“ று சொல்லிப் புலம்புவாள். பின்பு பு
“ ருஷனை அதற்கென்ன முகாந்தரம் எ
“ ன்று கேட்டால் அவன் சொல்லுவான்
“ அதுசரிதான், என்பிதாமாதா கெடுத்த
“ கெடுதி, எனக்கு அந்தப் பெண்ணின்
“ மேல் மனமே இல்லை. பணத்துக்கு ஆ
“ சைபட்டு என் சம்மதமில்லாமல் செ
“ ய்தார்கள்; அந்தப்பழிக்கு அவர்களே
“ காரணம்என்று சொல்லுவான். கடை
“ சியில் தகப்பனுக்குக் கிடைக்கிறபலன்
“ இதுதான். அவன்யோசித்து அவர்க
“ ளிருவர் சம்மதியுங்கேட்டு, குணகுண
“ ங்களையும் அறிந்து விவாகஞ்செய்வித்
“ தால்இப்படிச்சஞ்சலம் நேரிடாது. பி
“ தாமதா தங்கள்பிள்ளைகள் பின்னுக்கு
“ நன்றாயிருக் கவேண்டும் என்று பாரி
“ யோசனைசெய்து, விவாகத்தைமுடியா
“ மல் விளையாட்டுக் காரியம்போல எண்
“ ணி, அவர்களிருவரும் கீரியும் பாம்பு
“ போல இருக்கும்படி செய்கிறது தர்ம
“ மா? “ஆய்ந்தோய்ந்துசெய்யாதவன்கா
“ ரியம்தான்சாந்துயரந்தரும்” என்றுபூ
“ லோகத்தில் சகஜமாய்ச்சொல்லிக்கொ
“ ள்வது வாஸ்தவமே. விவாகம் ஒருபெ
“ ரியகாரியம். சீவனுள்ளமட்டும் புருஷ
“ னுக்கும் மனைவிக்கும் இருக்கிற ஒருப
“ ந்தம். அதினால் ஒன்று அதிக நன்மை
“ யுண்டாகும், அல்லது தீமையுண்டா
“ கும். மனையாள் நற்குண நற்செயகை
“ யில்லாதவளா யிருப்பானாகில், குலத்
“ துக்கே ஈனமாயிருக்கும். “மனைமாட்
“ சியில்லாள்கணில்லாயின்வாழ்க்கையெ
“ னைமாட்சித்தாயினுமில்” என்று திருவ
“ ள்ளுவர்சொன்னார். அதின்கருத்துஉன
“ க்குத் தெரியுமே. எவ்வளவு செல்வம்,
“ திரவியம் இருந்தபோதிலும், மனையா
“ ளிடத்தில் நற்குணம் இராவிட்டால் இ
“ ல்வாழ்க்கை பயன்படாது. மூதனூலி
“ லும் அப்படியே சொல்லியிருக்கிறது.
“ குணசாலியானப்பெண்சாதியைக்கண்
“ டு பிடிப்பவன் யார் ! அவளுடைய வி
“ லை, முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்த
“ து” என்று சாட்சாத் கடவுள்சொல்லி
“ யிருககிறார். ஆனால் இப்படிப்பட்ட கு
“ ணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடித்
“ து, மணம்புரியாமல், பாச்சிசோச்சி எ
“ ன்று மழலைச்சொல் பேசுகிற சிறுகுழ
“ ந்தைகளைப்பிடித்து விவாகஞ் செய்தா
“ ல் இல்வாழ்க்கை எப்படி இலட்சணம
“ டையும். புருஷனுடையமனம் பெண்
“ சாதிக்குத் தெரியவேண்டும். இருவ
“ ருடையமனமும் பொருந்திஅந்தவிவா
“ கம் நடந்தால் நன்மையாயிருக்கும். அ
“ ப்படிக்கில்லாமல் இரண்டும் இரண்டு
“ ம் இரண்டும் நாலு என்று சொல்லத்
“ தெரியாத சிறு குழந்தைகளைப்பிடித்து
“ செல்வக் கலியாணஞ் செய்வதினாலே
“ பின்னுக்குக் கெடுதியே யல்லாமல் ப
“ யனில்லை”

இங்ஙனம்,

உன்தன்புள்ள சகோதரியாகிய

ஞானபரணம்.

நிருபங்கள்.

கோயிலாஸ்தி,

வினாவிடை.

மன்னுலகேற்றும்
சென்னப்பட்டணத்தில்
பன்னுதற்கரிய
முன்னூலுணர்ந்து.

சத்தியமேசக்தி
தத்துவமேசித்தி
மெய்யேவெல்லும்
பொய்யல்லவெனும்
வேதசமாஜமாம்
நீதிவான்களின்
தத்துவபோதினிக்
கர்த்தரவர்கட்கு
அனந்தவந்தனம்
உவந்துதந்தனம்.

வெண்பா.

கோயிலாஸ்திப் பொருளைக்கொண்டே தருமகர்த்தர்,
தீயவழியிற் செலவிடுதல் - ஞாயமோ,
கல்வியறிவூட்டிக் கடவுளறியச்செய்தல்,
நல்வினையன்றோநவில்.

வினா.

கோயில்களில் பிரம்மத்தியானமே செய்யும்வழக்கம் நிறைவேறுமானால் அந்தந்தக்கோயில் விக்கிரகங்களுக்கு அளவற்ற ஆபரணங்களும், பொருள்களும், பூஸ்திதியு முதலானவைக ளிருக்கின்றனவே அவைகளை என்னசெய்கிறதென்று சிலர் கேட்கிறார்கள்.

விடை.

இப்போதிருக்கும் அந்தந்தகோயில்தர்மகர்த்தா முதலானவர்கள் மேற்சொல்லிய ஆஸ்திகளால் செய்துக்கொண்டுவருங் காரியம் அறிவாளிக்குத்தெரியாதவைகளல்ல. அதிற்சிலதை நினைப்பூட்டி அதற்குமேல் உண்மையைஉரைத்தல் உத்தமமாகையால் சொல்லுகிறேன்கேளும்.

மேற்கண்டவரும்படியில் இப்போதுதர்மகர்த்தாமுதலானவர்கள் நடத்துவதென்னவென்னில்அந்தந்தக்கோயில்களிலிருக்கும், கல்முதலிய விக்கிரகங்களுக்குக்கும் அபிஷேகத்துக்கும், ஆடையாபரணங்களுக்கும், அன்னமுதலான பலகாரங்களுக்கும், தீவட்டி மத்தாப்பு பாணமுதலியவைகளுக்கும், வாகனங்களுக்கும் செலவுசெய்து இவ்விதகோலங்களை பாமரர்களுடைய கண்களுக்குப்பிரமிக்கச்செய்து அவர்களைப்பயித்தியக்காரராக்கிஅவர்கள் பணங்களைப்பறிப்பது எவ்வளவு பரிதாபமானகாரியம்,

இனி இப்பேர்ப்பட்ட வீண்காரியத்தில்அந்தந்த தர்மகர்த்தாக்களும் நாமும்பிரவேசியாமல் அந்தந்தக்கோயில்களுடைய ஆஸ்திகளால் வரும்பொருளை அந்தந்த கோயில்களைஅடுததே தருமவித்தியாசாலைக ளேற்ப்படுத்தி, அதற்குத்தகுந்த ஆசிரியர்களை நியமித்து, ஏழைமுதலியஅனைவோர்களுக்கும், அன்னமாடையளித்துக்கல்வியறிவூட்டி அவர்கள்மனக்கண்ணினால் பரமானந்தமாகிய பரப்பிரும்மத்தைக்கண்டு களிக்கச்செய்து, அப்படிப்பட்டவர்களும் மற்றவர்களும் ஏகமனதுடன் அந்தந்தகோயில்களில் பிரும்மத்தியானஞ்செய்து ஞானவான்களின் பிரசுரங்களைப்போற்றி பேரின்பத்தையடையச் செய்வது எவ்வளவு பிரயோஜனகாரியமாகும்.

வினா.

கல்வியில்லாவிட்டால் கடவுளறியக்கூடாதோ.

விடை.

கல்வியறிவில்லாதவர்கள் கல்லைத்தொழுவார்களென்பதும், கல்வியறிவுள்ளவர்கள் கடவுளைத் தொழுவார்களென்பதும், உலகப்பிரசித்தியாக விருக்கிறதே.

திருக்குறள்.

கற்கக்கசடறக்கற்பவைக்கற்றபின்
நிற்கவதற்குத்தக.

இதன்கருத்து.

ஒருவன் கற்கப்படும் நூல்களைச் குற்றமறக்கற்கக்கடவன். கற்றபின் கல்வியறிவிக்கு தக்கபடி நிற்கக்கடவன்.—என்பதாம்.

விடை.

மதாச்சாரியர்களுடையவும், ஞானச்சாரியர்களுடையவும், சிலபாசுரங்களைத் தெரிவிப்பதேபோதுமானதாலும் அவைகளில் ஆத்துமசம்ரக்ஷணைக்கு அனுகூலமானதை அனுசரிக்கவேண்டியது அவரவர்கள் முக்கியகடமையானதாலும், அதிகமாக அறியவேண்டியது அவசியமில்லை. ஆனால் சிலசெய்யுளைப்படிக்காமல் வசனத்தைப்படிக்கும் வழக்கமானதால் அப்பேர்ப்பட்ட கனவான்களை செய்யுளையும் படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்துவமதாசாரியர்.

நேரிசைவெண்பா.

ஒருகத்திலுருவினி லொருகத்திற்பூருவிலம்,

போருகத்தன்பாற பிறந்தபோழ்தனில்-கார்
நிறத்த,
கண்டத்தான் ரோதனஞ்செய் காரணத்தா
ல் ருத்திரனென்,
றெண்டவநூல்களுரைக்கும்.
ஊருவினில் - என்பது தொடையில்.
பூருவில் - என்பது புருவதில்.-என்பதாம்.

வைஷ்ணவமதாசாரியர்.

நம்மாழ்வார் முதலானவர்கள்.

திருவாசிரியம்.

களிர்மதிச்சடையனும் நான்முகக்கடவுளும்
தளிரொளியிமையவர் தலைவனுமுதலா
யாவகையுலகமும் யாவருமகப்பட
நிலநீர்திகால் சுடரிருவிசும்பும்
அலர்சுடர்பிறவுஞ் சிறிதுடன்மயக்க
ஒருபொருட்புறப்ப ரடினறிமுழுவதும்
அகப்படக்காங்தோ ராலிலைச்சேர்ந்த வெம்
பெருமாமாயனையல்லது
ஒருமாதெய்வமற்றுடையமோயாமே.

பதினான்குசீர் விருத்தம்.

மங்கைபாகன்சடையில்வைத்த கங்கையார்
பதத்துநீர்
வனசமேவுமுனிவனுக்கு மைந்தனானதில்லை
யோ
செங்கையாலிரந்தவன் கபாலமாறகற்றினர்
செய்யதாளின்மலாரன் சிரத்திலானதில்லை
யோ
வெங்கண்வேழமூலமென்ன வந்ததுங்கள்
தேவனோ
வீறுவாணன் மரிலன்று விறலழிந்ததில்லை
யோ
அங்கண்ஞாலமுண்டபோது வெள்ளிவெற்ப
கன்றதோ
ஆதலானரங்கனன்றிவேறுதெய்வமில்லையே.

நேரிசைவெண்பா.

அண்டமளக்கவடிக் கீழொடுங்கியுல
குண்டபொழுது தரத்துள்ளொடுங்கித் - தி
ண்டமதி
சூடினன் மாலருளாற் றேன்றினு னங்கவ
னைத்
தேடினன் மாலென்பதென்.
கையிருக்கக் காலிருக்கக் கண்ணிருக்கக்க
னுக்கு
மெய்யிருக்கவன்பா விரும்பாதே-வைத்துவி
ழும்
ஆண்குறியைப்பூசித் தழிவதெல்லா மாயவ
னை
வீண்குறியாப் பேசும்வினை.

எண்சீர்விருத்தம்.

பாதியாயழுகியகால் கையரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தாரே
னும்
ஆதியாயரவணையா யென்பராகில்
அவரன்றே யாம்வணங்கு மடிகளாவார்
சாதியாலோர்முகத்தால் மிக்கோரேனும்
சதுர்மறையால்வேள்வியால் தக்கோரேனும்
போதினான்முகன்பணியப் பள்ளிகொள்ளும்
பொன்னரங்கம்போற்றுதார் புலையர்தாமே.

அறுசீர் விருத்தம்.

வாரர்யமூலமெனுமாமுன் வந்தேமடுவிற்கா
ரங்கடிந்த
நாராயணனேசர்வக்கிய நாதனென்னத்தே
றுது
காராகண்டன்முதலோரைக் கடவுளென்றே
நரகடைவர்
ஆராவமுதேதிருமலைவா ழலர்மேன் மங்கை
நாயகனே.

வெண்பா.

விச்சுவவான சுகனுமெலொன்சமதங்கி
அச்சுவத்தரமன்னு மானவவுருவன்-மெச்
சுபுகழ்,
பொங்குதுருவாசன் போலிசைக் கிடவிய-
ஞர்
சங்கரன் பிறப்பன்றேதாம்,

சைவமதாசாரியர்.

மாணிக்கவாசகர்.

முதலானவர்கள்.

கட்டளைக்கலித்துறை.

கொள்ளேன்புரந்தரன்மாலயன்வாழ்வுகுடி
கெடினும்
நள்ளேனினதடியா ரொடல்லா நரகம்புகி
னும்,
எள்ளேன்றிருவருளாலே யிருக்கப்பெறினி
றைவா,
உள்ளேன்பிரதெய்வமுன்னையல்லா தெங்க
ளுத்தமனே.
சாவமுன்னட்டக்கன் வேள்வித் தகர்தின்று
நஞ்சமிஞ்சி
ஆவவெந்தாயென்ற விதாவிடுநம்மவரவரே,
மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணிவி
ண்ணுண்டு மண்மேல்
தேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரி
தவரே

எண்சீரவிருத்தம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து
தாணியொடுவரனுளத் தருவரேனும்
மங்குவராமவர் செல்வமதிப்போமல்லெம்
மாதேவர்க்கன் புடையாராரரேயேனும்
அங்கமெலாபுழுத்தழுகுங் கையரெனும்,
ஆவுரித்துத்தின்றிடுமாபுலையரேனும்,
கங்கைவார்சடைக்கரந் தோற்கன்பராகில்,
அவா னரூயாம் வணஙகுமடிகளாவார்,

எண்சீரவிருத்தம்.

பரவையாடி னுநதிகளாடினும் படியெலாக
டந்தடிகடேயினும்,
குரவராயினுங் கனலினின்றதன்கொதிபொ
றுக்கினும் கதிகிடைக்குமோ,
அரவமாடு செஞ்சடிலரங்கனுர முதநாணி
ணைந்தடியர்தம்மொடு,
விரவிநீரணிந்தருணே சேர்வரேல் வெற்றரா
யினு முத்தராவரே.

எழுசீர்விருத்தம்.

யாதவர்குலத்து நெடுமாதவன் மருப்புடை
ய வேன்மிருகத்திருவமா,
வேதமொழிபெற்றவயனுேதிம மெனப்பற
வை வேடமுமெடுத்ததிலேயோ,
ஓதருணேவித்தகரை மூவரி லொருத்தரென
வோதியிடுமெற்பமதியீர்,
சீதமதிவைத்தமுடிபாதமலரைச் சிறிதுதே
டுதனிணைத்தபரமே.

இன்னிசைவெண்பா.

மாமச்சங்கூர்மம் வராகமேநாரசிங்கம்
வாமனன் மூன்றிராமர் மாகண்ணன் கற்கி
வருமவர்களெல்லா மண்ணுலகில்மானே,
திருமால்பிறப்பன்றூ செப்பு.

பரமாச்சாரியர்.

தாயுமானவர் - முதலானவர்கள்.

அறுசீரவிருத்தம்.

பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப்
பேசாதபெரியமோனம்,
வருமிடமாய் மனமாதிக்கெட்டாதபேரின்ப
மனமாய் ஞானக்,
குருவருளாற்காட்டிடவு மன்பரைக்கொத்த
ற விழுங்கிக்கொண்டப்பாலும்,
தெரிவரிதாய்க்கலந்த தெந்தப்பொருள
ந்தப்பொருளிணையாம் சிந்தைசெய்வாம்
விண்ணாதிபூதமெல்லாந் தன்னகத்திலடக்கி
வெறுவெளியாய்ஞானக்,
கண்ணூரக்கண்டவன்பர் கண்ணூடேயானந்
தக்-கடலாய்வேறென்,
றெண்ணுதபடிக்கிரங்கித் தானகச்செய்த
ருளுமிறையே யுன்றன்,
தன்னருஞ்சாந்தவருள் தனைநினைந்து
கரமலர்கடலை மேற்கொள்வாம்,

ஆசிரியவிருத்தம்.

பண்ணேனுனக்கான பூசையொருவடிவிலே
பாவித்திறைஞ்சவாங்கே,
பார்க்கின்றமலரூடு நீயேயிருத்தியப்
பனிமலரெடுக்கமனமும்,
நண்ணேனலாமலிருகை தான்குவிக்கவெ
னில்-நாணுமென்னுள நிற்றிநீ,
கும்பிடும்போதரைக் கும்பிடாதலால்-நான்
பூசைசெய்யல்முறையோ,
விண்ணேவிணுதியாம் பூதமேநாதமே
வேதமேவேதாந்தமே,
மேதக்ககேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேயவித்தின்முளையே,
கண்ணேகருத்தேயென் எண்ணேஎழுத்தே
கதிக்கானமோனவடிவே,
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணுகரக்கடவுளே.
காகமானது கோடிகூடிநின்றாலுமொரு
கல்லின்முன்னெதிர் நிற்குமோ,
கர்மமானது கோடிமுன்னேசெய்தாலுநின்
கருணைப்பிரவாகவருளைத்,
தாகமாய்நாடினரை வாதிக்கவல்லதொ
தமியனேற் கருட்டாகமோ,
சற்றுமிலேயென்பதுவும் வெளியாச்சு
வினையெலாஞ் சங்கேதமாய்க்கூடியே
தேகமானதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராமல்யோகமார்க்க,
சித்தியோவரவில்லைசகசநிஷ்டைக்கு மெண்
சிந்தைக்கும்வெகுதூரநான்,
ஏகமாய் நின்னோடிருக்குநாளெந்தநாள்
இந்நாளில் முற்றுமுறுதோ,
இகபரமிரண்டினினு முயிரினுக்குயிராகி
எங்குநிறைகின்றபொருளே.

வெண்பா.

வேட்டியுந்தாழ்வடமும் வெண்ணீறும் வெ
ண்பல்லும்
காட்டுவது ஞானக்களவுகாண், தேட்டமற்
றோன்
பூரணன்காண்சிற்றறிவன்பொய்ப்பாசமெ
ன்றறிந்தார்க,
கோரவடிவும் வார்த்தையுமுண்டோ.

இதன்பொருள்.

காவிவேட்டியும், உருத்திராக்ஷத்தாழ்வடமும், சரீரமுழுதும் பூசும் வெண்ணீறும், வெற்றிலைப்பாக்குத்தின்றதவெண்பல்லும் இவைமுதலிய சிலவேடங்களைக் காட்டுவது. ஞானத்திருட்டென் றறிந்துகொள். ஒருபொருட்கண்ணும் விருப்பமற்றதாகிய சிவம் பரிபூர்ணன், சீவன்சிற்றறிவன். பாசங்களை பொய்யென்றறிந்த ஞானவான்களுக்கு ஓர்சமையவேடமும் சமையவபிமானவார்த்தையுமுளவோ இல்லை. என்பதாம்.

ஆசிரியவிருத்தம்.

அயனரிருத்திரன் மகேசன்சதாசிவன்
அனைவருமுதித்தவாறொடுங்கி
அந்தமாம்பொழுதினு மாதிகாரணமாய்
அனைத்தையு மாண்டொழித்தவராய்
பயனறவிருப்பா ரென்கிறபடியே
பகாப்பொருளா யொருபரமாய்ப்
பருவமன்றிருக்கிறவர் தொழுதிலர்க்கு
பரிந்தணிசெய்கிற தொழிய
வியன்பெறவடித்த கதைகளின்படியே
விதியரிசிவ னுளதெல்லாம்
மெய்ப்பொருளிடத்துதித் தொடுங்குமென்
  றுழ்ந்த
வித்தகர் கருத்தெலாங்கேட்டு
இயன்மறுவறிந்துங் கிளிகளைப்போல்
விப்பிரர்க்குடம் பெடுத்துய்யர்
இச்சுரன்திருமால் நான்முகன்பணிந்தால்
ஏகனைத்தொழுவதாயிடுமோ.

இதன் பொருள்.

பிரமா, என்கிறமண்ணும், விஷ்ணுவென்கிற சலமும், ருத்திரனென்கிற அக்கினியும், மகேஸ்வரனென்கிறகாற்றும்சதாசிவனென்கிற ஆசாயமும்தோன்றினப்பிரகாரம் ஒடுங்கி முன்போல் முதற்காரணமாய் அனைத்தையும் ஆண்டொழித்தவராய் மீளவும் அப்பொருளை யெல்லாம் படைக்கிறவரா யிருப்பாரென்கிறபடியே. திருமூர்த்திகளாகவும், பஞ்சகர்த்தாக்களாகவும், பகுக்கப்படாத பகாப்பொருளாய் ஓரேயொருதெய்வமாய் மூப்பின்மையில்லாமல் இருக்கிற பிரகாரம் எப்பொழுதும் இருக்கிறவரைச்சேவித்து இல்லாமையுடைய எளியவர்களுக்கு அன்புடனே நன்மைசெய்து இன்பமடைவதுவிட்டு பெருமைபெறச்சோடித்தசதைகளின்படியே, பிரமா, விஷ்ணு, சிவன், மற்றுள்ளதனைத்தும் மெய்பபொருளாகிய பராபரத்தில் நின்றுதித்து மீளவும் அவருக்குள் ளொடுங்குமென்கிற ஞானவான்களுடைய ஆழ்ந்தகருத்துகளைக் கேட்டு தெய்வசுபாவமகிமையும். திரிமூர்த்திகளுடைய குற்றமுள்ள கட்டுக்கதைகளடங்கிய நடத்தைகளையுமறிந்தும் சொற்பொருளறியாக்கிளிகளைப்போல் கபடபார்ப்பார் சொல்லுக்குட்பட்டு எப்பொழுதும் பிழைதிருத்துஞ் சக்தியில்லாதசிவன் விஷ்ணு, பிரமா, வென்னும், நெருப்பு, நீர், நிலமாகிய பூதங்களைப்பணிந்தால் அது ஒன்றான பரப்பிரும்மத்தை தொழுகிறதாய் பலன்தருமோ, என்பதாம்.

திருக்குறள்.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
  பகவன் முதற்றேயுலகு,
இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்
  பொருள் சேர்புகழ்புரிந்தார்மாட்டு,
பொருளல்ல வற்றைப்பொரு ளென்றுணரு
  மருளானுமாணாப் பிறப்பு,
இருணீங்கி யின்பம் பயக்குமருணீங்கி
மாசறுகாட்சியவர்க்கு.

விருத்தம்.

மனமெனும்கலிடத்தில் வாழ்புத்தி வர்த்தி
  யாக்கி,
சொனமெனும் பிரமத்தியான சுடரினையேற்
  றிக்கொண்டால்,
கனமெனு மாசைக்காடுகருகியேஅழிவில்லா
  த,
தனமெனும் பிரமாநந்தஞ் சார்குவர் சீவர்
  தாமே.

இதன்பொருள்.

சீவர்களொவ்வொருவரும் மனமாகிய அகலினிடத்தில் வாழ்கின்ற பொன்போன்ற புத்தியாகிய வர்தியில், பிருமத்தியானமென்கிற சுடரை ஏற்றிக்கொண்டால் அளவில்லாத ஆசாபாசங்க ளென்கிற காடுகள்கருகி, அழிவில்லாப்பொருளாகிய பிரும்மாநந்தம்அடைவார்களென்பதே.

௧௮௯௯ வரு
மார்ச்சுமீ ௰௨
பெங்களூர்

இங்ஙனம்
அறிவோர்க்கன்பன்
ஆ, ஐயாசாமிமுதலியார்.

சதுர்வேதங்களைக்குறித்து.

ஜெகமிருள்நீக்குந்
தினகரனைப்போல்,
சீவர்மனவிருள்
தெளிவுறவுரைக்கும்
தத்துவபோதினிக்
கர்த்தரவர்கட்கு
பத்தியாய்வந்தனம்
நித்தியந்தந்தனம்.

ஐயா!

கிறிஸ்துமார்க்கத்தில் வேதம் இரண்டென்றும் மகம்மதுமார்க்கத்தில் வேதம் ஒன்றென்றுமிருக்க, நம்முடைய வியாசமார்க்கத்தில்மாத்திரம் வேதம் நாலென்றிருக்கவேண்டியதென்ன. அவ்வேதங்கள் ஆரால்சொல்லப்பட்டு ஆர்முகாந்தரமாக உலகுளோர்க்குத் தெரியவந்தது.

மேற்படி வேதங்களுக்கு வரையறை ஏற்படுத்தினனென்னும்இராவணன், சீதையைசிறையெடுத்தவனா அல்லதுவேறான வனா. அதில்.

இருக்குவென்பதில்என்னசங்கதிசொல்லுகின்றது.

யஜுர் வென்பதில், என்னசங்கதிசொல்லுகின்றது.

சாமம் வென்பதில், என்னசங்கதிசொல்லுகின்றது.

அதர்வண மென்பதில், என்னசொல்லுகின்றது.

இவைகளின் முக்கியகருத்துகளை இவ்வூரில் சிலர் ஆவலாய் விசாரிக்கிறார்கள். இவர்களைப்போலவே இதரவூர்களிலிருக்கும் அனேகர்தெரிந்துக் கொள்ள விருப்பமுள்ளவர்களாகவே இருப்பார்களென்று நம்புகின்றேன். ஆனதால்தங்களுக்கு சாவகாசமுள்ளபோதுதயைசெய்து (தத்துவபோதினியில்)தெரிவிக்கும்படித் தங்கள்உலகோபகாரகுணத்தைப் பிரார்த்திக்கிறேன்.

௧௮௬௬ ௵
மார்சு௴ ௧௨௨
பெங்களூர்

இங்ஙனம்
வேதசமாஜத்தை
விரும்புவோன்.

மகாகனம்பொருந்திய தத்துவபோதினிக் கர்த்தரவர்களுக்கு அனேகவந்தனம்.

ஐயா!

வேதானுசாரம்நிலைபெற்றிருந்த காலத்தில் ஏகேச்சுவரமதம் அல்லது பிரமஞானம் ஜனங்களுக்குள் பெரும்பாலும் உண்டாயிருந்த பகற்காலம் நீங்கி யாதொரு விதத்தில் வேதானுசாரத்திற்கு விரோதமாய் கல்பனையான புராணானுசாரனை விக்கிரகாராதனை சொற்பகாலத்திற்கு முன்னுண்டான தாந்திரசாஸ்திர மார்க்கமிவைகளாகிய அஞ்ஞான அந்தகாரத்தில் நமதுதேசத்தார் விழுந்து தடமாறிக்கொண்டிருக்கிற காலத்தில் ஞான ஒளியைத்தரும் சூரியனைப்போல் உதித்திருக்கிற வேதசமாஜ தத்துவபோதினியில் இவ்விடத்தில் நடந்தேறிவருகிற வேதசமாஜ சபையில் இந்த மார்ச்சுமாதம்-௧௮-தேதியாகிய ஞாயிற்றுக்கிழமைதினம் இதற்கடியிற் காண்கிறபடி இந்த உடுமலைப் பேட்டை டிஸ்திரிகட்டு முன்சீப், சை-காசிவிசுவநாதமுதலியாரவர்களால் செய்யப்பட்ட உபன்னியாசங்களைப்பிரசுரஞ்செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அஃதாவது.

"எனதன்புள்ள சோதரரே! வேதமுதலிய பெருமைபெற்ற சாஸ்திரங்கள் எந்த பாஷையிலிருக்கின்றனவோஅந்தபாஷையாகிய ஸம்ஸ்கிருதபாஷைக்கு நான்அன்னியனாயிருப்பதால் அப்படிப்பட்டமேலான உசிதமான சாஸ்திரங்களை உணர்ந்து யாதொருவிஷயத்தை யெடுத்து இப்படிப்பட்டசபையில் பிரசங்கிக்கசக்தியில்லாதவனா யிருந்தபோதிலும் சில இங்கிலீஷ் கிரந்தங்களிலும் தமிழ் கிரந்தங்களிலும் அப்படிப்பட்ட மேலானவிஷயங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதில்பிரமனென்பதிது, அதன் சத்துவங்களின் அமிசங்கட்குவந்த பேர்கள் இன்னவையென்றும், புராண கல்பனையாலுண்டான தேவர்களின் ஞரென்றும் இவையெல்லாம் கல்பனையான குருட்டுவழியென்றும் வேதஸமாஜத்தார் விளக்குவதே சத்தியமென்றும்நன்மார்க்கமென்றும் என்புத்திக்கு எட்டினமட்டும் எடுத்துக்காட்டும் சிலவிஷயங்களைக கேழ்க்க சிலருக்குபிரயோசனமும் விருப்பமுள்ளதா யிருக்குமென்று நம்பிச் சொல்லத்துணிகின்றேன்.

"எனக்குத்தெரியவருகிற பிரகாரம் பிரமமென்கிற மேலானவஸ்துவைக்குறித்த இலக்கணமாவது பிரமத்தின் குணப்பரி

" யாய நாமங்கள் நித்தியம், பூரணம், பர
" மார்த்தம், பரப்பிரம்ம நிதானம், சாந்த
" ம், சத்தியம், கேவலம், துரியம், சமம்,தி
" ருக்கும், கூடஸ்தன், சாட்சி,போதம்,சுத்
" தம், இலக்கியம், சநாதநம், சீவன், தத்து
" வம், விண்,சோதி,ஆத்மா, முத்தம், விபூ,
" சூக்குமம், எனவாம். விலக்குநாமங்களா
" வன, அசலம், நிரஞ்சனம், அமிர்தம், அ
" ப்ரமேயம், விமலம், வசனாதீதம், அசடம்,
" அநாமயம், அசங்கம், அதுலம், நிரந்தரம்,
" அநணு, நிரூபம், அகடம், அசமம், அனந்
" தம், அவினாசி, நிர்குணம், நிஷ்களம், நிர
" வயவம், அனாதி, அசரீரம், அவிகாரம், அ
" த்துவீதம், என விலக்குநாமங்கள் அனே
" கமுண்டு.

" பிரும்மம், தேகமில்லாததும், சித்ரூப
" மானதும், அதரிசனமானதும், பிறவாத
" தும், படைக்கப்படாததும், ஆதியந்தமில்
" லாததும், எல்லையில்லாததும், ஆராயக்கூ
" டாததும், இந்திரியங்கட்கு அகோசரமா
" னதும், வைதீகபோதனை மதிமயக்கமாகி
" ய குருட்டுக்கண் படலம் நீங்காதவரைக்
" கும் அறிவாலறியக்கூடாததும், குணமில்
" லாததும், பூரண புனித பொருளாகவும்,
" மனச்சலனமற்ற இயல்பாகவும், பூரணோ
" பசாந்தமாகவும், மனிதசெய்கைகளில் பி
" ரபஞ்சகாரியநடப்பில் பற்றில்லாததுமா
" யிருக்கின்றது.

" அந்த எல்லையற்ற மனோதீதமான சுவய
" ம்பாகி அரூபி அல்லது ஆவியிலிருந்து ஒ
" ப்பனைசெய்யக்கூடாது. அவருடைய நே
" ரான அடுத்தமகிமைக்குக் கோயில்கள் உ
" ண்டாக்க ஒண்ணாது. (வேதம்) "எவரு
" டைய மகிமையானது மகாபெரிதாயிருக்
" கின்றதோ அவருக்கு உருவமில்லை." (வே
" தம்) " எது எல்லர்த்தையும் பிரகாசிப்பிக்
" கின்றதோ, எது எல்லவற்றையும் ஆனந்தி
" ப்பிக்கின்றதோ, எதிலிருந்து எல்லாமுண்
" டாகின்றதோ, எதனால் பிறந்திபோதுசீவி
" த்திருக்கின்றதோ, அந்த அதரிசனமான
" மட்டிடக்கூடாதவஸ்துவின் உரூபிக்கபப்
" டுகிற தேவலட்சணங்களை ஆலோசிக்கத்
" துடங்குவோமாக.

"பிரமமும்சீவனும்ஒன்றே,எதுசரீரத்தின்
" எல்லாஅவையங்களிலும்வியாபிக்கிறதோ
" எது அவைகட்கு உயிர்ப்பும் அசைவுந்தரு
" கிறதோ அது சீவனென்று சொல்லப்படு
" கின்றது. எதுபிரபஞ்சமுழுதும் வியாபித்
" து எல்லாத்துக்கும் உயிர்ப்பும் அசைவுந்த
" ருகின்றதோ அது பிரமமென்று சொல்ல
" ப்படுகின்றது. அவனின்றி அணுவும் அ
" சையாது, ஆகையால் இவ்விரண்டும் ஒன்
" றே, எல்லா சடபதார்த்தமும் சீவனில்லா
" மலிருக்கின்றது, எது சிருஷ்டிக்கப்பட்ட
" தோ அது சீவனுடையதாகமாட்டாது. ஆ
" கையால் எல்லாச்சீவனும் சிருஷ்டிகர் அ
" ல்லது பிரமம்(என்றால் அவரால் மகிமை
" யுள்ளது.)கடவுள் உலகத்திற்கு ஆத்துமா
" வாகவிருக்கிறார். இதுதான் வேதாந்தசா
" ஸ்திரத்தின் சாரம், கடவுள் உலகத்துக்கு
" ஆத்துமாவாக விருப்பதுமல்லாமல் உலக
" மே கடவுளாக விருக்கின்றது. எவ்வாறெ
" னில் கடவுள் எல்லையற்ற நானாவித வடிவ
" ங்களிலும் பரவியிருக்கின்றார். எல்லாவ
" ஸ்துக்களும், இறந்தகாலம், நிகழ்காலம்,
" எதிர்காலம், ஆகிய எல்லாம் நிலம், நீர்,
" தீ, கால், வெளி, ஆகிய எல்வகைப்பூதங்
" களும் எல்லாத்துக்கும் காரணமாயும்,யா
" வற்றிலும் யாவுமாயுமிருப்பதே பிரமம்.
" இன்றையதினம் இவ்வளவோடு முடிக்கி
" றேன் வருகிற வாரத்தில் பிரமத்திற்குரி
" ய மூன்று சத்துவங்களி லொன்றாகிய பி
" ரமாவைக்குறித்துப் பிரசங்கிக்கப்படுமெ
" ன்று வெளியிட்டார்."

கஅகூகூ௵ மார்சி௴ ககஉ உடுமலைப்பேட்டை	இங்ஙனம் தங்கள்விதேயன், கோ, கிருஷ்ணய்யர்.

தத்துவபோதினி பத்திராதிபருக்கு,

ஐயா,

நாளதுமீ எஉ - தத்துவபோதினியில் இவ்விடத்திலும்ஓர்சமாஜம்உண்டாயிருக்கிறதாகக் கேள்விப்படுகிறதாகவும், அதில் நடாத்தும் காரியங்களை அறிய விரும்புவதாகவும் எச்சரித்திருந்த விஷயத்தைப்பற்றி யான் இரண்டொரு மொழிகளை வரையத்துணிந்தேன்.

உலகங்களையெல்லாம் படைத்தளிக்கும் ஏகபரமபுருஷனாகிய பகவானை தியானமார்க்கமாய் பஜிக்கும்பொருட்டு இவ்விடத்திலும் சமாஜம் ஒன்றுளதெனக் கேள்விப்பட்டது மெய்யே. ஆனால் அது தெளிந்தஞானிகளால்அலங்கரிக்கப் பெற்றபெரியசபையாயிராமல் சிரத்தையும்பக்தியுமாத்திரமுடையவர்களின்சிறியகூட்டமா யிருப்பதால் சமாஜத்தார்தாங்களே வெளிக்குத் தெரிவித்துக் கொள்ள நா

ணியிருந்தார்கள் போலும். சமாஜத்தின் சுவரூபம் இப்படிக்கிருத்தலால் அதின் பூஜாகாலங்களில் நடக்கும் கைங்கரியங்கள் அக்கூட்டத்தாரின் சிரத்தை பக்தி ஞானம் பரஸ்பரநேசம் முதலியநற்குணங்களின் பயிற்சிக்கு ஓர்தூண்டு கருவியாயிருக்கப் போதுமானவைவயாகத் தோற்றினபோதிலும் தாங்களும் தத்துவபோதினியை வாசிக்கும் பெரியோர்களும் கேட்டுமகிழும்படியான அவ்வளவுசிறப்பையுடைத்தா யிராவென்றெண்ணுகிறேன்.

இப்பஜனைக்கூட்டம் ௧௮௬௪௵-அக்டோபர்௴-௧௳ - சநிக்கிழமை தினம் துவக்கப்பட்டது. அன்றுமுதல் பிரதிசனிக்கிழமையும் மாலை-௬-மணிக்குமேல் சமாஜத்தார்களும்அக்காலத்தில்நடப்பதைபார்க்கவும் கேட்கவும் பிரியமுடைய சிநேகிதர்களும் வந்து சேர்ந்தபின் முதல் கூட்டத்தாரெல்லோரும் எழுந்து நின்றுகேட்க அவர்களில் ஒருவரால் சமாஜவந்தனம் படிக்கப்படுகின்றது. இரண்டாவது வேத, சாஸ்திரங்களின் சுருக்கமாக பங்காளப் பிரமசமாஜத்தாரால்கோர்வை செய்யப்பட்டிருக்கிற பிம்ம தருமத்தின் முதல் இரண்டாவது கண்டங்களிலிருந்து ஒவ்வொரு அத்தியாயம் வாசிக்கப்பட்டு அவற்றின் தாத்பரியமும் அவராலேயே விவரிக்கப்படுகின்றது. மேலும் அவ்வேளையில் சமாஜத்தாரில் யாதாமொருவரால் பயபக்திக்குரிய வேதேனும் ஓர்விஷயத்தைப்பற்றி எப்போழ்தாவது உபநியாசம் செய்யப்படுகிறதுமன்றித்தத்துவபோதினியில் அப்போதைக்கபோது பிரசித்தமாகிற கடவுள்துதி, உபநியாசங்கள்முதலிய தருமவிஷயங்களைச்சிலவேளை வாசிக்கிறதுமுண்டு. முடிவில் கடவுள் ஸ்தோத்திரம் ஒன்று மேற்படி வந்தனத்தைப்போலவே எல்லோரும் பக்தியாய்க்கேட்கப்படித்தபின் கூட்டம் கலைகிறது வழக்கமா யிருக்கின்றது.

இதுவுமன்றியில் பங்காளத்து பிரமசமாஜத்தாரால் செய்யப்பட்ட உபநியாசங்களுள் சிலவற்றை கொஞ்சநாளாய் பிரதிஞாயிற்றுக்கிழமையிலும் சர்ச்சித்து வருவதுமுண்டு.

இந்தச்சபை யேற்பட்டு ஒன்றரைவருடமாகியும், முக்கியமாய் இடம், காலம் கல்விக்குறைவு முதலியகாரணங்களால், சமாஜத்தாரின் கூட்டம் விசேஷ விருத்தியடையாதிருந்த போதிலும், கருணாநிதியாகியகடவுளின்கிருபாநோக்கத்தினால்தத்காலத்தில் இவ்விடத்திலுள்ள சில கனவான்கள் ஒருகூட்டம் கூட்டுவித்துத்தத்துவபோதினியைக் கிரமமாய் வாசித்துவர முயற்சிசெய்ய வெத்தினப் பட்டிருக்கின்றனர். இந்த ஏற்பாடு சீக்கிரத்தில் கைக்கூடிவரலாம். அது துவங்கின உடன் தங்களுக்கு வெகு விருப்பத்துடன் தெரிவிப்பேன்.

மேற்படி பட்டுக்கோட்டை சமாஜத்தைப்போல் தஞ்சைநகரிலும் ஒன்று சுமார் மூன்றுமாதங்களுக்குமுன் ஏற்பட்டு பூசா கைங்கரியங்களும் மேற்குறித்தபடியே நடந்துவருகின்றன.

பட்டுக்கோட்டை ௧௮௬௪௵ மார்சி௴ ௨௰௳	இப்படிக்கு தங்கள்விதேயன் ஆ-சி, பிநாகபாணி முதலியார்.

தத்துவபோதினி பத்திராதிபருக்கு,

ஐயா !

இவ்விடத்தில் நாளது௴-௨௩௳-இரவு பலகனவான்கள் ஒரிடத்திற் கூடும்படியான ஒரு நற்சமயம் நேரிட்டது. அப்போது தாலூக்காகச்சேரி முன்சீப்கோர்ட்டு முதலிய அனேக உத்தியோகஸ்தர்களும்முக்கியமாசுவர்தகரும் மிராசுதாரருமாக சுமார் அறுபதுபேர்வரையில் கூடியிருந்தார்கள். இந்தசமயம்வீண்போகாதபடி தாசிலதாரர்ம-ா-ா அய்யாசாமி சாஸ்திரியாரவர்களும், டிஸ்டிரிக்டுமுன்சீபுதாரர் ம-ா-ா ஸ்ரீ அருணகிரிமுதலியாரவர்களும் தத்துவபோதினியைப் பற்றியும், அதின்உத்தேசியம், அதினாலுண்டாகும்பிரயோஜனம்இதுகளைப்பற்றியும் பிரஸ்தாபித்தார்கள். அதின்முக்கியமான சிலகுறிப்புகளைத் தங்களுக்கனுப்பத்துணிந்தேன். தங்கள்பத்திரிகையிற் பிரசுரஞ்செய்வது தகுதியென்றெண்ணினால் இதற்குச் சிறிதிடம் தாரதிருக்கமாட்டீர்களென்று நம்புகிறேன்,

முதலில் அய்யாசாமிசாஸ்திரி யவர்கள் சொன்னதாவது, உலகத்தில்மனிதர்மிருகங்கள்முதலிய பலஜீவகோடிகளுக்கும் ஆகாரம் நித்திரை முதலியசெயல்கள் பொதுவாய் அமைக்கப்படிருக்கின்றமையால் எல்லாஜீவர்களும் சமமேயானபோதிலும் ஞானவிசேஷத்தால் மனிதன்மாத்திரம் சிறந்தவனுகக் கொள்ளப்படுகிறான். அந்தஞானமானது சாமான்னியஞானமென்றும்விசேஷஞானமென்றும் இருவகையாம். சாமாந்நியஞானமானது உலகவாழ்க்கைக்குரியது. விசேஷஞானமானது கடவுள்விஷயத்திற் குரியது. முற்சொல்லியது எல்லோருக்கும் அநுபவசித்தமானத்தினாலே அதைப்பற்றிஒன்றும் பிரஸ்தாபிக்கவேண்டியதில்லை. பிற்சொல்லியதைப் பற்றிமாத்திரம் சிலது பிரஸ்தாபிக்க வேண்டியதாயிருக்கின்றது. அந்தவிசேஷஞானம் அரூபியானகடவுளின் சச்சிதானந்தாதி குணங்களை அறிந்துகொள்வதாயிருக்கின்றது. அப்படி அறிந்துகொள்ளாதவரையில் கடவுள் ஓந்தகடமையை நமது தலையில் சுமத்தினாரோ அதை ஏற்ற உபாயங்களால் செய்து பூஷிக்காதவர்களாய் துன்பமேயடைவோம். ஆதலால் அதை மநுஷியசாமாந்நியர்களும் தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியகம், அப்படித் தெரிந்துக் கொள்வதற்கான ஞானப்பயிற்சி எதுவரையில் ஒருவன் செய்யாதிருக்கிறானோ அதுவரையில் பசுப்பிராய:மாகவே யிருக்கிறான். இதற்குத்திருஷ்டாந்தம்கூறவேண்டியதில்லை. அந்தப்பயிற்சிக்கு உபயோகமான உபநிஷத்துகளும், ஸ்மிருதிகளும், வேதாந்தசாஸ்திரங்களும், அவைகளின் பாஷியங்களும்வடமொழியிலிருப்பதாலும், தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் சிலவும் செய்யுளாயிருத்தலினாலும் சற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கு அவைகள் விளங்குவது வெகுகடினமா யிருக்கின்றது. அப்படிக்குக்கற்றோரும் தத்காலத்தில்வெகு அரிதாயிருக்கிறார்கள். இருக்கும் சிலருள்ளும் தங்களுக்குத் தெரிந்ததை பிறர்க்கறிவிக்கும் கம்பீரமான மனமுடையவர்களகப்படுவது துர்லபம். சாஸ்திரங்களோபலவாறாகவிருக்கின்றன. அவைகளையறிவது வெகுகாலம்சிரமப்பட்டபோதிலும் கடினமே, பற்பலசிவனுவிருத்தியில் பிரவேசித்த நமக்கோஅவைகளைக்கற்றறிய அவகாசமுமில்லைஉபகரணங்களுமில்லை. இந்தபரிதாபமான நிலையைப் போக்கி நம்முன்னோர்களுக்குள்வேதாந்த தத்துவஞானம் எப்படி சாதாரணமாய்ரூடியிலிருந்ததோ அந்தஸ்திதியைமீண்டும்கொண்டுவருவதற்கான சுலபமார்க்கம் இன்னதெனத்தேர்ந்து பண்டித பாமரர்களுக்கும் எளிதில் பேதமாகத்தக்க வழக்கமான தமிழ்நடையில் ஞானவிருத்திக்கேற்ற உபநிஷத்து, பகவத்கீதை, மநுஸ்மிருதி முதலிய சிறந்தகிரந்தங்களை மொழிபெயர்த்துத்தத்துவபோதினியென்னும் ஓர்பத்திரிகையின் மூலமாய் வேதசமாஜத்தார் அன்புகூர்ந்து அச்சிடுவதுமன்றி அநேகசாஸ்திரங்களை யாராய்ந்து அவற்றின் திட்டநுட்பங்களை குரோடீகரித்து அப்போதைக்கப்போது சில விஷயங்களைப்பற்றியும் அதில் பிரசுரஞ்செய்கின்றனர் வெளிப்பிரதேசத்தில்வேதாந்த சாஸ்திரத்தில் சியடைந்த சில ஜீவகாருண்யமுள்ள ஞானவான்களும் தத்துவஞான பரமாத்நமஞான விஷயங்களைப்பற்றியயதார்த்தக்கொள்கையை இப்பத்திரிகையின்மூலமாய் வெளிப்படுத்திச்கொண்டும்வருகிறார்கள். இப்படிப்பட்ட பத்திரிகையைப் படிப்பதினாலேயேபலசாஸ்திரங்களின் துணிவும்அவைகளினாலறியவேண்டிய முக்கியவிஷயங்களும், பிரமஞானவிஷயமும் திட்டமாய்விளங்கும். இவ்வளவு சுலபமாய்க்கிடைப்பதை நாம்நன்றியரிதலுடன் விநியோகப்படுத்திக்கொள்ளாமலும் அதின்பிரசாரத்தைக் கோராமலும் விடுவோமானால் அது நமதுகுற்றமாமேயொழிய வேறே யாரைப் பொருக்கும். மேலும்இந்தபத்திரிகையை யச்சிடுவதில் ஷிசமாஜத்தார் ஈஷத்தேனும் பிரயோஜனத்தை நாடிச்செய்யவில்லையென்பதுநிதர்சனமாயிருக்கின்றது. அவர்கள் சருவத்திராளுடைய ஞானவிருத்தியையே விரும்பிநம்மவர் நலத்தையேகோரி நல்லெண்ணத்துடன் திரவியநஷ்டத்தையும் பெரிதுபாராட்டாமல் தங்களாலானமட்டும் முயன்று வருகின்றனரேயன்றி வேறில்லை; என் றிவ்விதமாக அப்பத்திரிகையை வசிப்பதினாலுண்டாகும் பயனைத்தெளிவாக விவரித்தபின் அதையொவ்வொருவரும் வாசித்துவரவேண்டுமென்று வற்புறுத்திப் பேசியதுமல்லாமல் ஒருவரேதனிமையில் வாசிப்பதைப்பார்க்கிலும் பலர்கூடி ஆக்ஷேபசமாதானங்களுடன் வாசிப்பதினால் உண்டாகும் பெரும் பிரயோஜனத்தைப் பின்னும் எடுத்துச்சொல்லி அப்படிச்செய்வதற்காக நமக்கெல்லாம் ஒழிந்த நாளாயிருக்கிற ஞாயிற்றுக் கிழமை தோறும்கூடி வாசித்துவருவது உசிதமென்றும் கேட்டுக்கொள்ளுகிறதாகவும் சயுக்திகளுடன் பிரசங்கித்தனர்.

இவ்வாறு சொல்லப்பட்டதையும் கேட்டுக்கொண்டதையும் அருணகிரிமுதலியாரவர்கள் ஆமோதித்து மானிடஜன்மம் கிடைப்பதெவ்வளவு அரிதென்றும், கிடைத்தும் நமக்குப்பிரதான சின்னமாகிய ஞானத்தின் வி

ருத்திக்கு இன்றியமையாக்கருவியாகிய சாதுசங்கங்களிற்சேர்ந்து தத்துவவிசாரஞ்செய்யாது விடுவது நமக்கெவ்வளவு ஹீனமென்றும், இதுவரையில் தகுதியான வசன நடைக்கிரந்தங்களில்லாதிருந்ததைப்பற்றி அது அசாத்தியமாயிருந்த போதிலும் தத்காலத்தில் வேதசமாஜத்தாரின் உதவியால் நமக்குக்கிடைத்துவரும் தத்துவபோதினியால் சுலபசாத்தியமென்றும், அப்படிச் சேர்ந்து கேட்கமுயலுவது ஒவ்வொருவருடைய நீங்கலாக்கடமையென்றும் அதற்குதாரணமாக

"கற்றிலனாயினும் கேட்கவஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந்துணை"

என்று திருவள்ளுவனாயனாரும்,

"கேள்விமுயல்"

எனஔவையாரும் திருவாய் மலர்ந்தருளியிருக் கின்றனரென்றும் கேட்பவர் மனதிற் பதியும்படி விஸ்தாரமாய்ப் பேசினர்.

ம-ா-ா-ஸ்ரீ-வக்கீல்-சாமிசாஸ்திரியாரவர்களும், ம-ா-ா-ஸ்ரீ-வக்கீல்-ஸ்ரீநிவாசஐயங்காரவர்களும் மற்றும் சிலகனவான்களும் ஆமோதிக்க எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை தோறும் தத்துவபோதினியை வாசிக்கும் பொருட்டு கூடுவதாக வொப்புக் கொண்டனர்.

அதின்பின், நம்மவர்கள் ஒரு லௌகிக காரியத்தை முன்னிட்டுக்கொண்டு கூடும் போது சாதாரணமாய் சதிர்வைப்பது வழக்கமாயிருக்கினும்இந்தச்சமயத்தில்வைக்காதொழிந்ததற்கு முகாந்திரம் அதினின்று தப்பாமல் விளைகிற பெரும்பாதகம்இன்னதென்று அய்யாசாமிசாஸ்திரி யாரவர்கள் விரித்துரைத்தது போதாதென தத்துவபோதினிமுதல் இலக்கத்தில் பிரசுரமாயிருக்கிற சதிரைப்பற்றிய பிரஸ்தாபத்தையும்; தத்துவபோதினியென்றால் கிரிஸ்துவர்கள் இதரமதத்தை தூஷித்தெழுதுவதைப் போலொத்த பத்திரிகையென நம்பியிருப்பதாய் நினைக்கப்பட்ட சிலகனவான்களின் சம்சய நிவாரணார்த்தமாய் இதில் பிரசுரமாயிருக்கும் பகவத்கீதை-கங-வது அத்தியாயத்தின் தமிழ் தர்ஜமாவையும், கேட்பவர் காதுகுளிரவாசித்தனர்.

முடிவில் தத்துவபோதினியை வாங்கிப்படிக்கவேண்டியதைப்பற்றியும் அதைச் சேர்ந்து வாசிக்கவருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்றுமணிக்குக் கூடவேண்டியதைப்பற்றியும் சுருக்கமாய் பிநாகபாணிமுதலியார் ஞாபகப்படுத்தியபின் கூட்டம் கலைந்தது.

பட்டுக்கோட்டை
கஅகூகூ-ளு
மார்ச்சுமீ உஎவ

தங்கள்விதேயன்,
யத்கிஞ்சித்.

சேலம்வேதசமாஜ விண்ணப்பம்.

சகலசமயத்தாரும், அபேதமாக, அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராகிய பேராநந்தப் பெருங்கடவுளைத் தமதிஷ்டபூர்வகமாகத் தொழுதற்கிடமாயொருதிருமாளிகை சுமார் மூவ்வாயிரம் ரூபாய் பொறுமான பெருங்கட்டடமாகச் சமைக்க எத்தனப்பட்டிருப்பதால், அந்தத்தருமகாரியம் நிறைவேறும்படி அவரவர்க்கிசைந்த சந்தாவைக்கொடுத்து உதவிசெய்வார்களென, அதிவிநயத்தோடு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சந்தாபணம் சேலத்தில் -அஜூர்-கஜான்சி - ம-ா-ா-ஸ்ரீ - அண்ணுசாமிமுதலியாரிடம் அனுப்பலாம்.

வெளிப்பிரதேசங்களிலுள்ள கனவான்கள் தயவுசெய்து தங்கள் சந்தாவுடன் தமதிஷ்டர்களுடைய சந்தாவையுங் கூடியசீக்கிரத்தில் வசூல்செய்து, சந்தாபட்டியுடன், ஷெபணத்தை, பாங்கிநோட்டாயாவது, உண்டியாயாவது, அல்லது பத்துரூபாயிக்குக் குறைந்ததாயின், அலரஅணு லேபிலாயாவது தபாலில் ரிஜஸ்டர்செய்து மேற்கண்டவர்பேருக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. தபால்முதலியகூலி சந்தாவில் தள்ளிக்கொள்ளலாம்.

கஅகூகூ௵ ஜனவரி௴ சேலம்.

இங்ஙனம்,
பா. சுப்பராயலு செட்டி,
காரியதரிசி.

புனர்விவாஹ விளம்பரம்.

க. சென்னைப்பட்டணம் நிவாசியாகிய ஸ்மார்த்தபிராமணன், சுமார் முப்பதுவயது, சர்க்கார் உத்தியோகஜீவனம், ஸ்மார்த்தபிராமணர்களில் பிரவிடையாகாத முன் பதிவியோகமடைந்த பாலிகையை சாஸ்திர சம்மந்தமான புனர்விவாகஞ்செய்துக்கொள்ள விரும்புகிறார்.

உ. கூடலூர் நிவாசியாகிய சுமார் இருபத்துநாலுவயது, சர்க்கார் உத்தியோகஜீவனமுள்ள ஒரு ஸ்மார்த்தபிராமணர்களில் பிரவிடையாகாத முன் பதிவியோகமடைந்த பாலிகையை சாஸ்திரசம்மந்தமான புனர்விவாகஞ் செய்துக்கொள்ள விரும்புகிறார்.

மேற்கண்டபடி பதிவியோகமடைந்த புத்திரிகளையுடையவர்கள் இஷ்டமிருந்தால் மற்றசங்கதிகளைத் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் தெரிந்துகொள்ளலாம்.

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர் அமிருதராவார்; மற்றவர் துக்கமேயடைவார். மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால்பதிப்பிக்கப்பட்டது.